ஊடக அறிவித்தல் இல. 07

தேர்தல் ஆணைக்குழு

**2021.02.25 ஆம் திகதி நடைபெற்ற தேர்தல் ஆணைக்குழுக் கூட்டத்தின்போது கீழ் குறிப்பிடப்படும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.**

- 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல் சட்டத்திற்கமைய அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினால் 2019 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்படவுள்ள கணக்காய்வு அறிக்கைகளை இதுவரை தேர்தல் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்காமை மற்றும் / அல்லது பூர்த்தி செய்ய வேண்டிய ஏனைய தேவைப்பாடுகளைப் பூரணப்படுத்தாத அரசியல் கட்சிகள் சம்பந்தமாக பரீட்சித்து அந்தக் கட்சிகளின் அங்கீகாரத்தை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

- ஒவ்வொரு காரணங்களின் அடிப்படையில் அரசியல் கட்சிகளினால் உள்ளூர் அதிகார சபைகளிலிருந்து நீக்கப்பட்ட உறுப்பினர்கள் அவர்கள் நீக்கப்பட்டமைக்கு எதிராக நீதிமன்ற ஆணையொன்றைப் பெற்றுக்கொண்டிராவிட்டால் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் (262 ஆவது அத்தியாயம்) பிரகாரம் அவர்களை உறுப்பினர் பதவிகளிலிருந்து நீக்க வேண்டியிருப்பதனால், அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரிய தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

- சனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் மற்றும் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் போன்ற தேர்தல்களுக்காக தற்போது காணப்படும் கட்டுப் பணத் தொகையின் அளவை திருத்தியமைப்பதற்கும், தேர்தலொன்றின்போது சுயேச்சையாகப் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு மாத்திரம் கட்டுப்பணம் செலுத்த வேண்டும் என்ற தற்போது நிலவும் ஏற்பாடுகளை திருத்தியமைப்பதற்கும் குறித்த ஏற்பாடுகளை சுயேச்சையாகப் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு மாத்திரம் வரையறுக்காமல் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கும் குறித்த தேவைப்பாட்டை செல்லுபடியாக்குவதற்காக சட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் உள்ளடக்கப்பட்ட சட்ட மூலத்திற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக சனாதிபதியின் செயலாளருக்கு அனுப்புவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

**சமன் ஸ்ரீ ரத்னாயக்க**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்

தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை,
ராஜகிரிய.
2021.03.01